**உதைபந்தாட்டச் சம்மேளன அங்குரார்பணம்**

உலகத்தமிழர் ஒருங்கிணைப்புக்குழு விளையாட்டுத் துறையினரால் 27.05.2000 அன்று காலை 10.30 மணிக்கு பேர்ண் தமிழர் இல்லத்தில் உதைபந்தாட்டக்கழகங்கள், உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு விளையாட்டுத்துறை ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட ஒன்றுகூடலில், கலந்து கொண்ட கழகங்களின் வேண்டுதலுக்கிணங்க சுவிஸ் தமிழர் உதைபந்தாட்ட சம்மேளனம் உருவாக்கப்பட்டது.

சுவிற்சர்லாந்திலுள்ள தமிழர் உதைபந்தாட்டக் கழகங்களை ஒழுக்கமும், கட்டுப்பாடும் நிறைந்த கழகங்களாக உருவாக்குவதோடு, வீரர்கள் மத்தியில் விளையாட்டுத்திறனையும் வளர்க்கும் நோக்கோடு இச்சம்மேளனம் செயற்படும்.

இந்நிகழ்வில் 2001ம் ஆண்டிற்கான அவதானிப்புக்குழுவின் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டனர். பின்னர் 16.04.2001 லுசேர்ன் மாநிலத்தில் நடைபெற்ற கழகங்களுக்கான விசேட ஒன்றுகூடலில் அனைத்துக் கழகங்ளினதும் வேண்டுதலுக்கிணங்க விளையாட்டுக் கழகங்களில் அக்கத்துவம் பெறும் வீரர்கள் அவதானிப்புக் குழுவில் இடம் பெறுவது தவிர்க்கப்பட்டுள்ளது.

**பெயரும் அமைவிடமும்**

சுவிஸ் தமிழர் உதைபந்தாட்ட சம்மேளனம் என்னும் பெயரில் உலகத்தமிழர் ஒருங்கிணைப்புக் குழு விளையாட்டுத் துறையினை தாய் அமைப்பாகக் கொண்டு செயற்படும்.

**அமைப்பின் நோக்கம்.**

புலம் பெயர்ந்த மண்ணில் ஒழுக்கமும், கட்டுப்பாடும் நிறைந்த ஒரு உதைபந்தாட்ட அணியை உருவாக்கும் வகையில் உதைபந்தாட்டத்தை ஊக்குவித்தல், விளையாட்டு வீரர்கள் மத்தியில் சிறந்த நற்பண்புகளை வளர்த்தல் எனும் நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் சம்மேளனமானது திட்டங்களை உருவாக்கிச் செயற்படும்.

கழகங்களுக்கான கடிதங்கள் அனைத்தும் மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படும், மற்றும் சம்ளேனத்தின் தகவல்கள் யாவும் சம்மேளன இணையத்தளமாகிய www.stfainfo.ch ல் பார்க்கலாம்.

**நிறைவேற்றுக்குழு**

| | | |
|---|---|---|
| 1. | விளையாட்டுத்துறை | 1 பிரதிநிதி |
| 2. | இளையோர் அமைப்பு | 1 பிரதிநிதி |
| 3. | தமிழர் இல்லம் | 1 பிரதிநிதி |

நிறைவேற்றுக்குழு நிரந்தரமானதாகவிருக்கும்.
பிரதிநிதித்துவ அமைப்புகள் விரும்பும் பட்சத்தில், அவர்களின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள் மாற்றப்படலாம்.

**பொதுக்கூட்டம்.**

ஒரு மாதத்திற்கு முன்னர் கழகங்களுக்கு எழுத்து மூலமாக அறியத் தரப்பட்டு குறைந்தது வருடம் ஒரு தடவையாவது நடைபெறுதல் வேண்டும்.

ஏதாவது முக்கிய தவிர்க்கமுடியாத காரணங்களுக்காக அவசரகாலப் பொதுக் கூட்டம் கூட்ட வேண்டுமெனில் இரு வாரகால முன்னறிவித்தலுடன் அதற்கான காரணத்தையும் தெரியப்படுத்தல் வேண்டும்.

சம்மேளனத்தினால் நடாத்தப்படுகின்ற இரு பொதுக்கூட்டத்திற்கும், கழகத்தின் சார்பாக பொறுப்பாளர்,அணித்தலைவர்,பயிற்சியாளர் உட்பட குறைந்தது மூவர் வருகைதருதல் அவசியம், தகுந்த காரணமின்றி வருகை தராவிடில், அக்கழகம் அடுத்த பொதுக்கூட்டம் வரை சுற்றுப்போட்டிகளில் கலந்து கொள்வதற்கும் சுற்றுப்போட்டியினை நடாத்துவதற்கும் அனுமதி மறுக்கப்படும்.

**செயற்குழு கூட்டம்**

இருவாரங்களுக்கு முன்னர் எழுத்து மூலமாக அறியத் தரப்பட்டு நடைபெறுதல் வேண்டும்.

ஏதாவது முக்கிய தவிர்க்கமுடியாத காரணங்களுக்காக அவசரகால செயற்குழுகூட்டம் கூட்டவேண்டுமெனில் மூன்று நாட்களுக்கு முன்னறிவித்தலுடன், அதற்கான காரணத்தையும் தெரியப்படுத்தல் வேண்டும்.

கழகங்களிலிருந்து எட்டுப்பேர் கொண்ட கண்காணிப்புக் குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது,

இவர்களுடன் கலந்தாலோசித்தே முடிவுகள் எடுக்கப்படும்.

(விளையாட்டுத்துறை சார்ந்த சுற்றுப்போட்டிகளுக்கு சம்மேளன நிறைவேற்றுக்குழுவே முடிவு எடுக்கும்.)

## 1. அடிப்படை விதிமுறைகள்

1.1. குறித்த விதிமுறைகளை மாற்றும் அதிகாரம் நிறைவேற்றுக்குழுவிற்கு மட்டுமே உண்டு

1.2. பரிசளிப்புக்காக அணிகளை அழைக்கும்போது அந்நிகழ்வின் முக்கியத்துவம் கருதி வீரர்களும் பொறுப்பாளர்களும் பரிசளிப்பு நடைபெறும் இடத்திற்கு வருகை தருதல் அவசியம். குறிப்பாக இறுதி ஆட்டத்தில் கலந்து கொண்ட கழகங்கள் சீருடையுடன் வந்து வெற்றிக் கிண்ணங்களை பெற்றுக்கொள்ளுதல் விரும்பத்தக்கது. இவ்விதிமுறை தேசியம் சார்ந்த போட்டிகளில் கட்டாயம் பேணப்படும்.

1.3. மாவீரர் வெற்றிக்கிண்ணம், தமிழீழக்கிண்ணம்,அன்னைபூபதி நினைவுக்கிண்ணம் போன்ற முக்கிய சுற்றுப்போட்டிகளில் ஆரம்ப நிகழ்வாகிய, கொடியேற்றல், கொடிவணக்கம், அகவணக்கம் நிகழ்வுகளின் போது, மைதானத்திற்கு வருகை தந்திருக்கும், வீரர்கள், கழகங்கள் மற்றும் அனைவரும் தமது சீருடைகளுடன் ஆரம்ப நிகழ்வு நடைபெறும் இடத்தில் பிரசன்னமாயிருத்தல் அவசியம். குறிப்பாக நேரஅட்டவணையில் முதலாவதாக ஆட இருக்கும் அணிகள் இந்நிகழ்வில் பங்கு பற்றுதல் அவசியமாகும். தவறும் பட்சத்தில் குறித்த வீரர்கள், கழகங்கள் போட்டிகளில் கலந்து கொள்வதற்கான தகமையிழந்தவர்களாக கருதப்பட்டு,அன்று நடைபெறும் சுற்றுப்போட்டியில் கலந்து கொள்வதற்கான அனுமதி மறுக்கப்படும்.

1.4. சம்மேளத்தினால் நியமிக்கப்படும் பணியாளரையோ அல்லது கழகத் தொடர்பாளரையோ அவதூறாக பேசினாலோ, தாக்க முற்பட்டாலோ அந்த வீரர் ஒருவருட காலம் சுற்றுப் போட்டிகளில் விளையாடுவதற்கான அனுமதி மறுப்பினையும் அத்துடன் அவரிடம் இருந்து அபராதப் பணமாக SFR 250.- அறவிடப்படும்.

1.5. சம்மேளன செயற்பாட்டளர்களையோ, நடத்துனர்களையோ தவறான வார்த்தைகளினால் அவமரியாதை செய்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

1.6. ஒரு சுற்றுப் போட்டியில் அசம்பாவிதங்கள் அல்லது விதிமுறை மீறல்கள் நடைபெற்றால் அச்சுற்றுப் போட்டியினை நடாத்திய கழகம் சம்மேளன விதிமுறைகளுக்கு அமைய ஒழுங்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். தவறும் பட்சத்தில் சம்மேளனம், சுற்றுப்போட்டி நடத்திய கழகத்தின் மீது ஒழுங்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

1.7. சுவிஸ் வதிவிட உரிமை அற்ற ஏனையோர் விளையாடி சுற்றுப் போட்டியை நடாத்திய கழகத்தால் அது நிருபிக்கப்பட்டால் அணிப்பொறுப்பாளருக்கு ஒரு வருடகால இடை நிறுத்தமும், அவ்வணிக்கு கேணல் கிட்டு ஞாபகார்த்த உள்ளரங்கம், அன்னைபூபதி கிண்ணம், தேசிய மாவீரர் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணம் மற்றும் தமிழீழக்கிண்ணம் ஆகிய போட்டிகளில் விளையாடுவதற்கான அனுமதி மறுப்பினையும் பெறும்.

1.8. வருட இறுதியில் சம்மேளனத்தினால் மீதப்படுத்தப்படும் நிதி சம்மேளன தெரிவு அணி மற்றும் தமிழீழ விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்காக செலவிடப்படும்.

1.9. சம்மேளனத்தின் உயர்விற்கான இறுதி முடிவுகள் நிறைவேற்றுக் குழுவினரால் மேற்கொள்ளப்படும். இதற்கான ஆலோசனைகளையும் கருத்துக்களையும் உறுப்பினர்கள் அனைவரும் வழங்கலாம்.

1.10. விதிமுறைகளில் மேற்கொள்ளப்படும் மாற்றங்கள் பொதுக் கூட்டத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படும்.

1.11. ஒரு கழகம் சந்தாப் பணம் செலுத்தத் தவறும் பட்சத்தில் அச்சந்தாப்பணம் செலுத்தும் வரையும் செலுத்தியபின் அடுத்து வரும் சுற்றுப் போட்டியிலும் விளையாடுவதற்கான அனுமதி மறுப்பினைப் பெறும்.

1.13.ஆட்டத்தில் பங்கேற்கும் வீரர்கள் இலக்கம் இட்ட சீருடைகளை அணிந்திருத்தல் வேண்டும். சீருடையின் கீழங்கி, மேலங்கி ஆகியவற்றின் இலக்கங்கள் ஒரேமாதிரியானதாக இருக்க வேண்டும். அத்துடன் காற்பாதுகாப்புக் கவசமும் அணிந்திருத்தல் வேண்டும். தவறும் பட்சத்தில் ஆட்டத்தில் பங்கெடுக்கமுடியாது.

## 2. <u>உறுப்புரிமை</u>

2.1. சுவிஸ் நாட்டில் உள்ள தமிழர் உதைபந்தாட்டக் கழகங்கள் யாவும் வருட சந்தாவாக 100.- சுவிஸ் பிராங்குகளைச் சம்மேளனத்திற்குச் செலுத்தி தம்மை பதிவு செய்து கொள்ளலாம்.

2.2. உறுப்புரிமை பெற்ற கழகங்களில் சுவிற்சர்லாந்தில் வதிவிட அனுமதி கொண்ட தமிழர்கள் அல்லது இலங்கையை பூர்வீகமாக கொண்ட சுவிஸ் குடியுரிமை பெற்றவர்கள் மட்டுமே அங்கம் வகிக்கலாம்.

2.3. ஒரு வீரர் தனது தகவல்களை உறுதி செய்து 7.- சுவிஸ் பிராங்கினை சம்மேளனத்திற்குச் செலுத்தி, சம்மேளனத்தின் இணையத்தளத்தில் அடையாள அட்டைப் பதிவுக்கு அனுப்புவதனூடாக சம்மேளன உறுப்புரிமை பெறவேண்டும்.

2.4. விண்ணப்பித்த அடையாள அட்டைகளை கழகப்பொறுப்பாளர் சம்மேளனத்திடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

2.5. வீரர்கள் தொடர்பான பிழையான தகவல்களை சம்மேளனத்திற்கு வழங்கி அது நிரூபிக்கப்பட்டால் குறிப்பிட்ட வீரரைக்கொண்ட அணியும்,பொறுப்பாளரும் ஒருவருடகாலம் சுற்றுப்போட்டிகளில் கலந்து கொள்வதற்கான அனுமதி மறுக்கப்படுவதோடு,குற்றப்பணமாக 200-சுவிஸ் பிராங்குகளை சம்மேளனத்திற்கு செலுத்தவேண்டும்.

2.6. புதிதாக கழகத்தில் இணைபவர் இணையத்தளத்தில் உள்ள விண்ணப்ப படிவத்துடன் புகலிட அனுமதியின் நிழற் பிரதியையும், புகைப்படத்தையும் அனுப்பி சம்மேளனத்தில் விண்ணப்பித்து, 14 நாட்களுக்கு பின்பே அக்கழகத்துக்கு விளையாட அனுமதிக்கப்படுவார்.

2.7. நடைமுறைச் சிக்கல்களை தவிர்க்கும் முகமாக அனைத்து கழகப்பொறுப்பாளர்களும், பயிற்சியாளர்களும் அடையாள அட்டை பெறுதல் அவசியம்.

2.8. பதினாறு வயதிற்கு உட்பட்டவர்கள் சுவிஸ் தமிழர் உதைப் பந்தாட்ட சம்மேளன அங்கத்துவ அணிகளுக்காக ஆட முடியாது.

2.9. ஒரு வீரர், தான் அங்கம் வகிக்கும் கழகத்திலிருந்து விலகி வேறு கழகத்தில் இணைய விரும்பின் அவ்வீரர் சுய விருப்பின் பெயரில் சொந்தமாக தனது கைப்பட நீலவர்ண எழுதுகோலால் எழுதிய விலகல்கடிதமூலப் பிரதியினை சம்மேளனத்திற்கும், பிரதியினை கழகத்திற்கும் பதிவுத் தபால் மூலம் அறிவித்து July முதலாம் திகதியில் இருந்து July முப்பத்தியோராம் திகதி வரை மட்டுமே விலகமுடியும். ஆனால் அவ்வீரர் தான் சேரும் கழகத்தின் புது அடையாள அட்டை பெற்று, தமிழர் விளையாட்டு விழாவின் பின்னரே வேறுகழகத்திற்கு விளையாடலாம்.

2.10. ஒரு கழகத்திலிருந்து விலகுவதற்கான கடிதம் சம்மேளனத்திற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டிய அவசியம் இல்லை. அதற்கான கடிதத்தையும் பற்றுச்சீட்டையும் மின்னஞ்சல் மூலம் அனுப்பி, அனைத்து படிவத்தையும் A தபால் மூலம் அனுப்பினால் போதுமானது.

2.11. ஒரு வீரர் கழகத்தில் இருந்து விலகினால் அல்லது விலக்கப்பட்டால் அவரின் விலகலை அக்கழகப் பொறுப்பாளர் இரு வாரங்களுக்குள் சம்மேளனத்திற்கு அறியத்தரல் வேண்டும்.

2.12. ஒரு கழகம் கலைக்கப்படுவதாயின் **July முதலாம் திகதியில் இருந்து July முப்பத்தியோராம் திகதி வரை** மட்டுமே கலைக்க முடியும்.

2.13. ஒரு கழகம் கலைக்கப்பட்டால் அக்கழகத்தில் விளையாடிய வீரர்கள் உடனடியாகவே தாம் விரும்பும் கழகத்திற்காக விளையாட விண்ணப்பிக்கலாம். ஆனால் கலைக்கப்பட்ட கழகம் அல்லது அக்கழகத்தில் உள்ள வீரர்கள் சம்மேளனத்தினால் தண்டனை பெற்றிருப்பின் தண்டனைக் காலம் முடியும் வரை எக்கழகத்திற்கும் விளையாட முடியாது.

2.14. வீரர் ஒருவர் அவ்வாண்டு எந்த ஒரு ஆட்டத்திலும் தான் அங்கம் வகித்த கழகத்திற்காக ஆடாது விடின் அடுத்த ஆண்டில் அவர் தனது கழக அங்கத்துவத்தை இழந்ததாக கருதப்படுவார். ஆனால் சுற்றுப் போட்டிக்கான பெயர்ப் பட்டியலில் குறிப்பிட்ட வீரரின் பெயர் இணைக்கப் பட்டிருப்பின் அவர் விளையாடியதாகவே கருதப்படுவார்.

2.15. இருவேறு கழகங்களுக்கு வெளியரங்க சுற்றுப் போட்டிகளில் விளையாட வீரர்கள் பற்றாக்குறை ஏற்படின் அவ்வாண்டின் யூன் மாத இறுதிக்குள் 01.07-31.07 அவ்விரு கழகங்களும் சேர்ந்து சம்மேளனத்துக்கு அறியத்தரும் பட்சத்தில் அவ்வருடம் இரு அணிகளும் சேர்ந்து தமிழர் விளையாட்டு விழாவின் பின்னரே விளையாடலாம்.

2.16. தர வரிசை அடிப்படையில் வெற்றிக்கான கிண்ணம் (Saison Meister) 2014-2015ல் இருந்து சுற்றுக் கிண்ணமாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ஒரு கழகம் தொடர்ச்சியாக மூன்று தடவைகள் வெற்றிக் கிண்ணத்தை பெற்றுக் கொள்ளும் பட்சத்தில் சுற்றுக் கிண்ணம் அக்கழகத்திற்கு சொந்தமாக வழங்கப்படும்.

2.17. தமிழீழக் கிண்ணத்திற்கான சுற்றுப்போட்டியில், தரவரிசையில் உள்ள நான்கு அணிகளுடன், மாவீரர் கிண்ணத்திற்கான சுற்றுப்போட்டியில் இறுதி ஆட்டத்திற்கு தெரிவாகிய இரு அணிகளுமாக மொத்தம் ஆறு அணிகள் தெரிவாகும். ஏற்கனவே தரவரிசையில் தெரிவாகிய இரு அணிகள் மாவீரர் கிண்ணத்திற்கு இறுதி ஆட்டத்திற்கு தெரிவாகும் பட்சத்தில், தரவரிசையில் 5ம், 6ம் இடத்தில் இருக்கின்ற அணிகள் தெரிவாகும்.

ஒரு விளையாட்டு வீரர் அல்லது பொறுப்பாளர் காலமானால் சுற்றுப்போட்டியை தாம் நடத்துவதா அல்லது நிறுத்துவதா என்னும் முடிவு சுற்றுப்போட்டியை நடாத்துபவர்களே எடுப்பார்கள். ஆனால் ஒருகழகம் அப்போட்டியில் பங்குபற்றாவிட்டால் புள்ளிகள் கழிக்கப்படமாட்டாது. இறுதிக்கிரியைகள் நடைபெற்றபின் நடைபெறும் சுற்றுப்போட்டியில் கழகங்கள் பங்குபற்றாவிடில் புள்ளிகள் கழிக்கப்படும்.

2.18. வளர்தோர், இளையோர் சுற்றுப்போட்டிகளை ஒன்றாகச் நடாத்த விரும்பினால், பெரியோரின் சுற்றுப்போட்டி திகதியில் மட்டுமே நடாத்த முடியும்.

## 3. சுற்றுப்போட்டி விதிமுறைகள்

3.1. நடுவர்கள் சுவிஸ் உதைபந்தாட்ட சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

3.2. சுற்றுப்போட்டியை நடாத்தும் கழகம் முதலுதவி ஏற்பாடு கட்டாயம் செய்திருத்தல் வேண்டும்.

3.3. சுற்றுப்போட்டிக்கான குழுத்தெரிவின் போது வேறு கழகத்தல் இருந்து குறைந்தது, ஒருகழக உறுப்பினராவது இருத்தல் அவசியம். எவரும் வருகை தராதபட்சத்தில் சம்மேளன உறுப்பினர் திரு முரளியுடன் Skype மூலம் அல்லது Viber மூலம் தொடர்பு கொண்டு குழுத்தெரிவினை மேற்கொள்ளலாம்.

3.4. சுற்றுப்போட்டியை நடாத்தும் கழகம் விளையாட்டு வீரர்களை மதுபானச்சோதனை (Alkocol test) செய்ய விரும்பின்,அதற்கான கருவியினை 15-சுவிஸ் பிராங்குகளை சம்மேளனத்திற்கு செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

3.5. சுற்றுப்போட்டியின் போது பெயர்ப்பட்டியல் பூர்த்தி செய்து வழங்கியபின் புதிதாக வீரரை இணைக்க முடியாது. ஆனால் வீரரின் சீருடை இலக்கமும் பெயரும் முதலில் எழுதியிருந்தால் அவ்வீரர் கையொப்பமிட்டு விளையாடலாம்.

3.6. நேர அட்டவனையின் படி போட்டிகள் நடத்தப்படல் வேண்டும் (இரண்டு 2 நிமிடங்களுக்கு பின் மைதானத்தில் உள்ள கழகத்திற்கு 3:0 வெற்றி வழங்கப்படும்).

3.7. சுற்றுப்போட்டியின் போது, அதனை நடத்தும் கழகம் குறைந்தது 4 பந்துகள் வைத்திருந்தல் வேண்டும்.

3.8. கழகங்கள் நடாத்தும் சுற்றுப்போட்டிகளின் மதிப்பெண்கள் சம்மேளன இணையத்தளத்திலும்,APP இலும் நேரஞ்சல் செய்யப்படும். இதற்கான செலவு 25- சுவிஸ் பிராங்குகள் ஆகும். இப்பணத்தினை சுற்றுப்போட்டியினை நடாத்தும் கழகமே செலுத்தவேண்டும்.

3.9. சுற்றுப்போட்டி தினத்திற்கு நான்கு நாட்களுக்கு முன்னர் நேர அட்டவணையினை சம்மேளனத்திற்கு அனுப்பி வைத்தல்வேண்டும். தவறும் பட்சத்தில் நேரஞ்சல் செய்யப்படமாட்டாது.

3.10. சுற்றுப்போட்டியினை நடாத்தும் கழகம் தமது அறிக்கையுடன் நடுவரின் அறிக்கை,நடுவரின்பெயர்,தகுதி,முகவரி,தொலைபேசி,மின்னஞ்சல் என்பன இணைக்கப்படவேண்டும்.

3.11. ஆட்டத்தின் போது வீரர்களுக்கிடையில் ஏற்படும் தகராறினை நடுவர் தீர்த்து வைப்பார். மாறாக மூன்றாவது நபர் (விளையாட்டு வீரர் ஆதரவாளர் பயிற்சியாளர்) மைதானத்திற்குள் நுழைந்தால் மூன்றுமாதகாலம் சுற்றுப்போட்டிகளில் கலந்து கொள்வதற்கான அனுமதி மறுக்கப்படுவதோடு நூறு சுவிஸ்பிராங்குகள் ( 100-CHF )குற்றப்பணமாகவும் அறவிடப்படும்

3.12. அவசியம் இன்றி வீரரோ ஆதரவாளரோ மைதானத்திற்குள் நுழைந்தால் ஆறுமாதகாலம் சுற்றுப்போட்டிகளில் கலந்து கொள்வதற்கான அனுமதி மறுக்கப்படுவதோடு இருனூறு சுவிஸ்பிராங்குகள( 200-CHF ) குற்றப்பணமாகவும் அறவிடப்படும்

3.13. ஆட்டத்தின் போது மேலதிக வீரர் மைதானத்திற்குள் புகுந்து தாக்கினால் ஆறுமாதகாலம் சுற்றுப்போட்டிகளில் விளையாடுவதற்கான அனுமதி மறுக்கப்படுவதோடு இருனூறு சுவிஸ்பிராங்குகள் ( 200-CHF ) குற்றப்பணமாகவும் அறவிடப்படும்.

3.14. ஆட்டத்தின் போது ஒரு வீரர் இன்னொருவீரரை தாக்க முயற்சித்தால் மூன்று மாதகாலம் சுற்றுப் போட்டிகளில் விளையாடுவதற்கான அனுமதி மறுக்கப்படும்.

3.15. சுற்றுப்போட்டிகளில் நடுவரின் தீர்ப்பு இறுதியானதாக இருக்கும். இதில் ஆட்சேபம் கொள்ளும் அணிகள் அல்லது வீரர்கள் தமது கருத்தை சுற்றுப்போட்டி நடாத்தும் அமைப்பாளர்களின் கவனத்திற்கு கொண்டு வருதல் வேண்டும், மாறாக இது தொடர்பாக மைதானத்தில் கலகத்தில் ஈடுபடுதலோ அல்லது நடுவரின் தீர்ப்பை மீறி மைதானத்தை விட்டு வெளியேறுதலோ அனுமதிக்கப்பட மாட்டாது. அவ்வாறு நடந்துகொள்ளும் வீரர்கள் அல்லது அணிகள் **குறைந்தது** அன்றும் அடுத்து வரும் மூன்று சுற்றுப்போட்டிகளில் அவர்களது கழகம் தொடர்ச்சியாக கலந்துகொள்வதற்கான அனுமதி மறுப்பினைப் பெறும்.

3.16. அணிகளின் பொறுப்பாளர்கள், பயிற்சியாளர்கள் அல்லது வீரர்கள் சுற்றுப்போட்டிகளின் போது எதிரணியினருடனோ, போட்டி ஏற்பாட்டாளர்களுடனோ, அல்லது நடுவர்களுடனோ வாக்குவாதம் மற்றும் தர்க்கத்தில் ஈடுபடும் பட்சத்தில் அவர்கள் **குறைந்தது** அன்றும் அடுத்து வரும் **மூன்று சுற்றுப்போட்டிகளிலும்** கலந்து கொள்ளும் வாய்ப்பினை இழக்க நேரிடும்.

3.17. மைதானத்தில் நடுவரின் தீர்ப்பை மீறி வீரர் ஒருவர் அல்லது அணியொன்று நடுவரைத் தாக்க முற்பட்டால் அவ்வீரர் குறித்த ஆட்டத்துடன் மைதானத்தை விட்டு வெளியேற்றப் படுவதுடன் குறித்த வீரர் **குறைந்தது ஒரு வருடகாலம்** சுற்றுப் போட்டிகளில். விளையாடுவதற்கான அனுமதி மறுப்பினையும் . அத்துடன் அணியிடம் இருந்து SFR 250.- அபராதப் பணமாக பெறப்படும்.

3.18. விளையாட்டு வீரர்கள் தமக்கிடையே கைகலப்பில் ஈடுபட்டால் குறித்த வீரர்கள் குறித்த ஆட்டத்துடன் மைதானத்தை விட்டு வெளியேற்றப்படுவதுடன் **குறைந்தது ஆறுமாத காலம்** சுற்றுப் போட்டிகளில் விளையாடுவதற்கான அனுமதி மறுப்பினையும் அத்துடன் அவரிடம் இருந்து அபராதப் பணமாக SFR 200.- அறவிடப்படும்.

3.19. சம்மேளனம் அல்லது கழகங்கள் நடாத்தும் போட்டிகளில் வெளிநாட்டு அணிகள் பங்கு பற்றுவதாயின் அவரவர் நாடுகளில் உள்ள விளையாட்டுத்துறையின் உறுதிப்படுத்தல் அவசியம்.

3.20. அவ்வாறு கலந்து கொள்ளும் வெளிநாட்டு அணிகளின் பெயர் பட்டியலுடன் வதிவிட அனுமதி அட்டையின் பிரதியினையும் பெற்று சம்மேளனத்திற்கு அனுப்பிவைத்தல் அவசியம

3.21. ஆட்டத்தில் பங்கேற்கும் வீரர்கள் இலக்கம் இட்ட சீருடைகளை அணிந்திருத்தல் வேண்டும். சீருடையின் கீழங்கி, மேலங்கி ஆகியவற்றின் இலக்கங்கள் ஒரேமாதிரியானதாக இருக்க வேண்டும். அத்துடன் காற்பாதுகாப்புக் கவசமும் அணிந்திருத்தல் வேண்டும். தவறும் பட்சத்தில் ஆட்டத்தில் பங்கெடுக்கமுடியாது.

3.22. ஒரு கழகம் சுற்றுப் போட்டிக்கு விண்ணப்பித்து குழுநிலைத் தெரிவின் பின் தவிர்க்க முடியாத காரணங்களினால் அச்சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ள முடியாவிடின் அதற்கான அனுமதிக் கட்டணத்தினை சுற்றுப் போட்டி அமைப்பாளர்களுக்கு செலுத்தல் வேண்டும்.

3.23. ஒரு கழகம் இரு அணிகளை அல்லது மேலதிக அணிகளை பதிவு செய்து குழுநிலை தெரிவின் பின் சுற்றுப்போட்டியில் பங்குபற்றாத பட்சத்தில். அவ் அணிக்கு வழங்கப்பட்ட புள்ளிகள் அனைத்தும் கழிக்கப்படும். ஆனால் பதிவு செய்த எல்லா அணிகளுக்குமான அனுமதிக்கட்டணத்தினை சுற்றுப்போட்டி ஏற்பாட்டாளர்களுக்கு வழுங்கவேண்டும்.

3.24. போட்டிகள் சம்பந்தமாக எந்தவொரு விடயம் கதைப்பதானாலும், அலுவலகத்தில் அணித்தலைவர், அணிப்பொறுபாளர் அல்லது பயிற்சியாளர் மட்டுமே தொடர்பு கொள்ள அனுமதிக்கப்படுவர். தவறும் பட்சத்தில் அக்கழகம் அன்றைய சுற்றுப்போட்டியிலிருந்து விலக்கப்படுவார்.

3.25. மைதானத்தில் ஆட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது ஆடு களத்தில் நடைபெறும் அனைத்து விடயங்களுக்கும் அணித் தலைவரே பொறுப்பாவார். ஆடு களத்திற்கு வெளியே நிற்கும் பயிற்சியாளர்கள் அல்லது அணிப் பொறுப்பாளர்கள் குழப்பம் விளைவிக்கும் பட்சத்தில் அவர்கள் நடுவரினால் மைதானத்தை விட்டு வெளியேற்றப்படுவர். தொடர்ந்தும் குழப்பம் விளைவித்தால் சுற்றுப் போட்டி முழுவதாக வெளியேற்றப்படுவார்.

3.26. கழகத்தின் அங்கத்தவர்கள் மதுபானம் அருந்தியது நிரூபிக்கப்படின் உடனடியாக மைதானத்தை விட்டு வெளியேற்றப்படுவார்.

3.27. சுற்றுப் போட்டியில் வன்முறைகள் இடம் பெற்றால் அதற்கு காரணமாக இருந்தவர்கள் சுவிஸ் காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்படுவர்.

3.28. சுற்றுப்போட்டியின்போது அனைத்து வீரர்களும் ஒரே மாதிரியான சீருடையே அணிந்திருத்தல் வேண்டும்.

3.29. சுற்றுப்போட்டியின்போது அணியுடன் பயிற்ச்சியாளருக்கான இடத்தில் இருவர் மாத்திரமே சீருடை தவிர்ந்த உடையுடன் நிற்கலாம்.

3.30. சுற்றுப்போட்டியின்போது இரு அணிகள் ஒரேமாதிரியான சீருடையெனில் நேர அட்டவணையில் வலதுபுறம் உள்ள அணி மாற்றுடை அணிதல் வேண்டும்

3.31. போட்டிகள் குறித்த நேரத்திற்கு ஆரம்பமாகும். தாமதமாகும் அணியினருக்கு மேலதிகமாக 3 நிமிடங்கள் மட்டும் வழங்கப்படும். தவறின் எதிரணிக்கு வெற்றி வழங்கப்படும். தாமதமாக வரும் அணி தனது அடுத்த ஆட்டத்தில் இருந்து சுற்றுப் போட்டியில் பங்கேற்கலாம்.

3.32. சம்மேளனத்தில் பதிவு செய்து அடையாள அட்டை பெற்றிராத வீரர்கள் போட்டிகளில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள். சுற்றுப் போட்டிகளின் போது அனைத்து வீரர்களிடமும் அடையாள அட்டைப்பதிவு தேவைப்படின் பரிசோதிக்கப்படும்.

3.33. ஒரு சுற்றுப் போட்டிக்கு ஒரு கழகம் இரு பிரிவுகளாக பங்கு பற்றுவதாயின் நேர அட்டவணை தயாரிப்பதற்கு முன்னர் குறைந்தது ஒரு பிரிவில் விளையாடும் வீரர்களின் பெயர்ப் பட்டியலை சுற்றுப் போட்டி ஏற்பாட்டாளர்களுக்கு வழங்க வேண்டும்.

3.34. சிறந்த வீரர் தெரிவின் போது மைதான ஒழுக்கம், விளையாட்டுத் திறன் என்பன முக்கியமாக அவதானிக்கப்படும்.

3.35. தண்டனை உதை (முறையே 5, 1, 1 என தொடரும்). போட்டியின் இறுதியில் மைதானத்தில் விளையாடியவர்கள் முதலில் அடித்தபின்பே ஏனையவர்கள் அடிக்கலாம்.

3.36. சுற்றுப் போட்டிகளின் போது இரண்டாவது ஆட்டத்திற்கு முன்னர் பெயர்ப்பட்டியலும் அனுமதிக்கட்டணமும் செலுத்தப்படுதல் வேண்டும். செலுத்தாவிடில் எதிர் அணிக்கு 3:0 வேற்றியினை வழங்கப்படும்

3.37. சுற்றுப்போட்டிகளின் போது ஆட்டத்திற்குரிய பந்தினை ஒழுங்கு படுத்துவதில் உள்ள நடைமுறை சிக்கல்களை தவிர்க்கும் முகமாக அனைத்து கழகங்களும் ஆட்டத்திற்கான பந்தினை கொண்டு வருதல் வேண்டும். குறித்த ஆட்டத்திற்கான பந்தினை நடுவர் தீர்மானிப்பார்.

3.38. **Kilchbergல் உள்ள உள்ளரங்க மைதானத்தில் பார்வையாளர் பக்கத்தில் உள்ள சுவருடன் சேர்த்து விளையாடாமல் முன்னுள்ள சிவப்புக் கோட்டை வைத்தே விளையாட வேண்டும்.**

3.39. **சுற்றுப்போட்டியை நடாத்தும் கழகம் சுற்றுப்போட்டி அறிக்கையை தமிழில் ஒரு வாரத்திற்குள் சம்மேளனத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும். தவறும் பட்சத்தில் அடுத்த சுற்றுப்போட்டி நடாத்துவதற்கான அனுமதி மறுக்கப்படும்.**

**4. சுற்றுப்போட்டி நடாத்துவதற்க்கான விதிமுறைகள்.**

4.1. உறுப்புரிமை பெற்ற கழகங்கள் சுற்றுப் போட்டிகள் நடாத்துவதாயின் அதற்கான அறிவித்தலை எழுத்து மூலமாக சம்மேளனத்தின் கழகங்களுக்கான தொடர்பாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

4.2. ஒரு கழகம் சுற்றுப்போட்டிக்கான திகதி தேவை என்றால் சம்மேளனத்திடம் மின்னஞ்சல் மூலமாக கேட்கப்படுதல் வேண்டும்.

4.3. ஒரு கழகத்திற்கு ஒரு திகதி மட்டும் தற்காலிகமாக அல்லது முடிவாக பதிவுசெய்யப்படும்.

4.4. ஒரு சுற்றுப்போட்டியில் ஆறு கழகங்கள் அல்லது அதற்கு அதிகமான கழகங்கள் பங்கு கொள்வதாயின் குறைந்தது இரண்டு குழுக்களாகவும், ஐந்து அதற்கு குறைவான கழகங்கள் பங்கு கொள்வதாயின் ஒரு குழுவாகவும் நேர அட்டவணை தயாரித்து நடாத்தப்படல் வேண்டும்.

4.5. சுற்றுப் போட்டியை நடாத்துகின்ற கழகம் பதிவுகளையும் தரவுகளையும் உரிய முறையில் ஆவணப்படுத்தி அத்துடன் ஒவ்வொரு கழகத்திலும் விளையாடிய வீரர்களின் பெயர்ப் பட்டியலின் பிரதி ஒன்றினையும், நடுவர் பதிவு அட்டையினையும், சுற்றுப் போட்டி விபரப்படிவத்தையும், சுற்றுப் போட்டி அறிக்கையுடன் இணைத்து ஒரு வாரத்திற்குள் அனுப்பி வைத்தல் வேண்டும்.

4.6. சுற்றுப் போட்டி நடாத்தும் கழகம் அச்சுற்றுப் போட்டியில் பங்கு பற்ற முடியாது. (சினேக பூர்வ ஆட்டத்தில் பங்கு பற்றலாம்.)

4.7. சுற்றுப் போட்டியில் அசம்பாவிதங்கள் ஏதும் நடைபெற்றால் அதற்கு காரணமானவர்களை சம்மேளனத்திற்கு அடையாளப்படுத்தல் வேண்டும்.

4.8. ஒரு கழகம் தகுந்த காரணம் காட்டி சம்மேளன அனுமதியுடனேயே சுற்றுப் போட்டியை நிறுத்தலாம்.

மேற்குறிப்பிட்ட சுற்றுப்போட்டி விதிமுறைகளை கடைப்பிடிக்க தவறும் பட்சத்தில் சுற்றுப் போட்டியினை நடாத்திய கழகம் உள்ளரங்க சுற்றுப்போட்டி -6 புள்ளிகளும், வெளி சுற்றுப்போட்டி -14 புள்ளிகளும் அக்கழகத்திற்கு கழிக்கப்படும்.

4.9. எழுத்து (மின்னஞ்சல் மூலம்) மூலமான விண்ணப்பங்களே ஏற்றுக் கொள்ளப்படல் வேண்டும். விண்ணப்பித்த கழகம் குழுநிலைத் தெரிவின் பின் சுற்றுப்போட்டியில் பங்குபற்றாவிடின் அக்கழகத்திடம் கட்டணப் பணம் அறவிடப்படல் வேண்டும்.

4.10. சுற்றுப் போட்டியில் பங்குபற்றும் கழகம் அனைத்துப் போட்டிகளிலும் விளையாட வேண்டும் விளையாடாத பட்சத்தில் அக் கழகத்திற்கு சுற்றுப் போட்டி புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

4.11. சமமேளனத்தின் சின்னத்துடன் உள்ள பெயர்ப் பட்டியல் மாத்திரமே எற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும்.

4.12. மதுபானம் அருந்திவிட்டு மைதானத்தினுள் நுழைவது கண்டிப்பாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் சுற்றுப்போட்டி நடாத்துபவர்கள் எவரையும் பரிசோதிக்க அனுமதியுண்டு.

4.13. சுற்றுப்போட்டியை நடாத்தும் கழகம், சுற்றுப்போட்டி ஒழுங்கமைப்பாளர்களாக ஏழு நபர்களின் பெயர் விபரங்களை வழங்குதல் வேண்டும். இவர்களில் நால்வர் ஆட்டம் நடைபெறும் பொழுது, மைதானத்தின் இரு பக்கங்களிலும் அவதானிப்பாளர்களாக பணிபுரிதல் வேண்டும். ஏனைய மூவரும் அலுவலகப் பணிகளில் ஈடுபடுதல் வேண்டும்.

4.14. சுற்றுப் போட்டி தினத்தன்று நடைபெறும் அனைத்து விடயங்களுக்கும் போட்டியை நடாத்தும் கழகமே பொறுப்பாகும்.

4.15. சம்மேளனத்தால் பார்வையாளர் தடை விதிக்கப்பட்ட வீரரோ அல்லது ஆதரவாளரோ தண்டனைக்காலம் முடியும் வரை சுற்றுப்போட்டிகளுக்கு வருகை தராமல் இருப்பதை குறித்த கழகமே உறுதிப்படுத்தவேண்டும்.தவறும் பட்சத்தில் தங்கள் கழகம் அச்சுற்றுப்போட்டியில் ஆடுவதற்கான அனுமதி மறுக்கப்படுவதோடு தங்களுக்கான புள்ளிகளும் கழிக்கப்படும். சுற்றுப்போட்டி நடைபெற்றுக்கொண்டிருக்கம் போது வெளியேற மறுத்து தொடர்ந்தும் பிரசன்னமாயிருந்தால் நிற்கின்ற ஒவ்வொருவருக்கும் தலா 5 புள்ளிகள் கழிக்கப்படுவதோடு தங்கள் கழகம் அடுத்து வரும் சுற்றுப்போட்டியில் கலந்து கொள்வதற்கான அனுமதி மறுப்பினையும் பெறும்.

4.16. தவிர்க்கமுடியாத காரணத்தால் தங்கள் கழகம் ஒரு சுற்றுப்போட்டியில் கலந்து கொள்ளாத பட்சத்தில் தடை விதிக்கப்பட்ட வீரரோ அல்லது ஆதரவாளரோ அச்சுற்றுப்போட்டிக்கு வருகை தந்தால் ஒவ்வொருவருக்கும் தலா 5 புள்ளிகள் கழிக்கப்படுவதோடு தங்கள் கழகம் அடுத்து வரும் சுற்றுப்போட்டியில் கலந்து கொள்வதற்கான அனுமதி மறுப்பினையும் பெறும்.

4.17. பார்வையாளர் தடை விதிக்கப்பட்ட வீரரோ அல்லது ஆதரவாளரோ தங்களாலோ அல்லது தாமகவோ கழகத்தில் இருந்து விலகினாலோ அன்றி விலத்தப்பட்டாலோ எழுத்து மூலம் சம்மேளனத்திற்கு உறுதிப்படுத்தவேண்டும்.

தங்களால் விலக்கப்பட்டால் தண்டனைக்காலம் முடியும்வரை காவல்துறை ஊடாக சுற்றுப்போட்டி தடையினை விதித்து அதன் பிரதியினை சம்மேளனத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.தாங்களாக விலகினால் சம்மேளனம் காவல்துறை ஊடாக சுற்றுப்போட்டித் தடையினை விதிக்கும்.

4.18. சுற்றுப்போட்டி நடாத்தும் கழகம் சம்மேளனத்தால் பார்வையாளர் தடை விதிக்கப்பட்ட வீரரோ அல்லது ஆதரவாளரோ சமூகம் அளிக்கும் பட்சத்தில் அதனை சுற்றுப்போட்டி அறிக்கையில் இணைத்தல் வேண்டும். தவறும் பட்சத்தில் சுற்றுப்போட்டியினை நடாத்திய கழகத்திற்கு 3 புள்ளிகள் கழிக்கப்படும்.

4.19. பார்வையாளர் தடைவிதிக்கப்பட்ட கழகத்தின் பொறுப்பாளர் தமது கழகத்தால் நடாத்தப்படும் சுற்றுப்போட்டியில் சம்மேளனத்தின் அனுமதி பெற்று பார்வையாளராகவும் கழகத்தின் வேலைத்திட்டங்களிலும் பங்கெடுக்கலாம்.

4.20. **கட்டணங்கள்**

**4.20.1. வெளியரங்கம்**

- 11பேர் கொண்ட சுற்றுப் போட்டிக்கு 16 பேருக்கு உணவு உட்பட Sfr 200.-
- 09பேர் கொண்ட சுற்றுப் போட்டிக்கு 14 பேருக்கு உணவு உட்பட Sfr 200.-
- 07பேர் கொண்ட சுற்றுப் போட்டிக்கு 12 பேருக்கு உணவு உட்பட Sfr 150.-
- தேசிய மாவீரர் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணம் 16 பேருக்கு உணவு உட்பட Sfr 300:-
- அனைத்துலக ரீதியான தமிழீழக் கிண்ணம் 16 பேருக்கு உணவு உட்பட Sfr 350:-

**4.14.2. உள்ளரங்கம்.**

- 05, 06, 07 பேர் கொண்ட சுற்றுப் போட்டிகளுக்கு 10 பேருக்கு உணவு உட்பட Sfr 160:-

**4.15. குழுத்தெரிவு முறைகள்**

4.15.1. சம்மேளன பட்டியலில் உள்ள முறையில் கழகங்கள் (Top 1, Top 2, Top 3) என பிரிக்கப்படுதல் வேண்டும்.

4.15.2. குழுநிலையாக பிரிக்கப்படும் சுற்றுப்போட்டியில் மூன்றாவது குழுநிலையில் அதிக புள்ளிகளை எடுத்த இரு கழகங்கள் குழுநிலைக்கு தேர்வாகும்.

4.15.3. குழுநிலையாக பிரிக்கப்படும் குழுநிலைத் தெரிவில், நான்கு கழகங்கள் உள்ள குழுநிலைப்பிரிவில் கடைசியில் உள்ள கழகத்துடன் விளையாடிய போட்டியின் புள்ளிகள் சேர்க்கப்படமாட்டாது.

**4.16. குழுநிலைப்போட்டிக்கு பின்**

**ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட குழுக்களை கொண்ட சுற்றுப்போட்டியில் 1/8 இறுதிப்போட்டிகள் பின்வரும்முறையில் தெரிவுசெய்யப்படுதல் வேண்டும்**

4.16.1. குழுநிலையில் முதலாவது கழகங்கள் TOP 1 ஆகும்
4.16.2. குழுநிலையில் இரண்டாவது கழகங்கள TOP 2 ஆகும்
4.16.3. ஒரே குழுப் போட்டிகளில் விளையடிய கழகங்கள் 1/8, ¼ இறுதிப்போட்டிகளில் சந்திக்கக்குடாது.
4.16.4. ஓரே கழகத்திலுள்ள முதலாம், இரண்டாம் பிரிவுகள் ¼ வரை ஒன்றுடன் ஒன்று சந்திக்க கூடாது.
4.16.5. ஓரே கழகத்திலுள்ள மூன்றாவது கழகம் 1/8 மாட்டும் ஒன்றுடன் ஒன்று சந்திக்கக்குடாது.
4.16.6. 1/8 இறுதிப்போட்டிகள் கொண்ட சுற்றுப்போட்டிகளில் ¼ , ½ குழுத்தெரிவுசெய்யப்படமாட்டாது.

**4.17. காலிறுதிக்கான சோடித்தெரிவு**

4.17.1. முதலாவது காலிறுதி: முதலாவது 1/8 FINAL WIN VS இரண்டாவது 1/8 FINAL WIN
4.17.2. இரண்டாவது காலிறுதி: மூன்றாவது 1/8 FINAL WIN VS நான்காவது 1/8 FINAL WIN
4.17.3. மூன்றாவது காலிறுதி: ஐந்தாவது 1/8 FINAL WIN VS ஆறாவது 1/8 FINAL WIN
4.17.4. நாலாவது காலிறுதி: ஏழாவது 1/8 FINAL WIN VS எட்டாவது 1/8 FINAL WIN

**4.18. அரையிறுதிக்கான சோடித்தெரிவு**

4.18.1. முதலாவது அரையிறுதி: முதலாவது 1/4 FINAL WIN VS இரண்டாவது 1/4 FINAL WIN
4.18.2. இரண்டாவது அரையிறுதி: மூன்றாவது 1/4 FINAL WIN VS நான்காவது 1/4 FINAL WIN

**விளையாட்டு விதிமுறைகள்.**

**4.19. வெளியரங்கம்**

4.19.1. 9 பேர் கொண்ட சுற்றுப்போட்டியில் 14 வீரர்களே பங்குபற்றலாம்
4.19.2. 11 பேர் கொண்ட சுற்றுப்போட்டியில் 16 வீரர்களே பங்குபற்றலாம்

4.19.3. 11 பேர் கொண்ட ஆட்டங்களின் போது ஒரு அணியின் சார்பில் குறைந்தது 7 வீரர்கள் இருப்பின் போட்டியை ஆரம்பிக்கலாம்.
4.19.4. ஒரு ஆட்டத்தின் போது 3 வீரகளுக்கு மேல் மாற்ற முடியாது. மாற்றம் பெற்று வெளியேறும் வீரர் மீளவும் அந்த ஆட்டத்தில் பங்கேற்க முடியாது.
4.19.5. ஆட்ட நேரம் குழு நிலைத் தெரிவுகள் 15 நிமிடங்களுக்கு குறையாமலும் இறுதிப்போட்டி 30 நிமிடத்திற்கு குறையாமலும் இருத்தல் வேண்டும்.
4.19.6. ஆட்டத்தின் முடிவுகள் புள்ளி அடிப்படையில் தெரிவு செய்யப்படும்.
4.19.7. ஒரு குழுவைச் சேர்ந்த இரு அணிகள் சம புள்ளிகளைப் பெற்றிருப்பின்! அடித்த கோல்களில் இருந்து வாங்கிய கோல்களை கழித்தல். இதிலும் சமநிலையெனில்! அதிக கோல்களை அடித்த அணிக்கு முன்னுரிமை, இதிலும் சம நிலையெனில்! இரண்டு கழகத்திற்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்ற அணிக்கு முன்னுரிமை, இதிலும் சம நிலையெனில்! தண்டனை உதை மூலம் வெற்றி தீர்மானிக்கப்படும்.

4.19.8. விளையாட்டின் போது தண்டனை உதையில் தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒரு அணி தனது பந்துக் காப்பாளரை மாற்றினால் புதிதாக மாற்றப்பட்ட பந்துக் காப்பாளரே அப் போட்டியில் இறுதி வரை பந்துக் காப்பாளராக இருத்தல் வேண்டும். மாற்றப்பட்ட அல்லது வெளியேற்றப் பட்ட பந்துக் காப்பாளர் மீண்டும் அதே ஆட்டத்தில் பந்துக் காப்பாளராக நிற்க முடியாது. ஆனால் ஏனைய தண்டனை உதையின் போது பந்துக் காப்பாளரை எச்சந்தர்ப்பத்திலும் மாற்றலாம்.

4.19.9. நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆட்டத்தில் தண்டனை உதையின் போது பந்து காப்பாளரை மாற்ற முடியாது. என்னும் விதிமுறை தளர்த்தப்பட்டுள்ளது. மாறாக ஆடிக் கொண்டிருக்கும் 11 வீரர்களில் விரும்பிய ஒருவர் எப்பொழுதும் பந்து காப்பாளராக மாறலாம்.

4.19.10. இறுதிப் போட்டி சம நிலையில் முடிவுற்றால் மேலதிக நேரம் வழங்கப்படும். தொடர்ந்து சம நிலையெனில் தண்டனை உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்படும்.

4.19.11. ஒன்பது மற்றும் பதினொருபேர் கொண்ட போட்டிகளில் இறுதியாக மைதானத்தில் இருந்த வீரர்கள் மட்டுமே தண்டனை உதையில் பங்கேற்கலாம்.

4.19.12. இறுதி ஆட்டம் ஒன்றில் சிவப்பு அட்டை பெற்று வெளியேறும் வீரர் தமது கழகம் கலந்து கொள்ளும் அடுத்த சுற்றுப் போட்டியில் தமது அணி ஆடும் முதல் ஆட்டத்தில் ஆட முடியாது.

4.19.13. இரு வேறு ஆட்டங்களில் மஞ்சள் அட்டை தண்டனை பெற்று வெளியேறும் வீரர் அவரது அணி விளையாடும் அடுத்த ஆட்டத்தில் பங்கேற்க முடியாது.

4.19.14. மஞ்சள் அட்டை தண்டனை பெறாது நேரடியாக சிவப்பு அட்டை தண்டனை பெறும் (நடுவரை அவமதித்தல், எதிர் அணி அல்லது சக அணி வீரரை தாக்கினல்) அவ்வீரர் சுற்றுப்போட்டி முழுவதும் விளையாட முடியாது. ஏனைய நேரடியாக சிவப்பு அட்டை நடுவரின் வாக்குமூலத்தின் படி சுற்றுப்போட்டி நடாத்துனர் முடிவு எடுக்கலாம்.

4.19.15. ஆட்டம் ஒன்றில் (இரண்டு மஞ்சள் அட்டை) சிவப்பு அட்டை தண்டனை பெற்று வெளியேறும் வீரர் அவரது அணி விளையாடும் அடுத்த போட்டியில் விளையாட முடியாது.

4.19.16. ஒன்பது பேர் கொண்ட போட்டிகளுக்கு Offside உண்டு.

4.19.17. ஒன்பது பேர்கொண்ட போட்டியில் மஞ்சள் அட்டைக்கு 5 நிமிட தண்டனை கிடையாது.

**4.20. உள்ளரங்கம்.**

5.2.1. இது 5, 6, 7 பேர் கொண்டதாக நடாத்தப்படும். 5 பேர் கொண்ட போட்டிகள் நடாத்தும் பட்சத்தில், மைதானம் குறைந்தது இருமடங்காக (double) இருத்தல் வேண்டும்.

5.2.2. கழகங்கள் ஆகக் கூடியது 10 வீரர்களின் பெயர்களை போட்டி நடாத்துனர்களிடம் வழங்கலாம்.

5.2.3. பத்து வீரர்களும் எத்தனை தடவையும் மாறலாம்.

5.2.4. தெரிவுப் போட்டி 10 நிமிடங்களுக்கு குறையாமலும், இறுதிப் போட்டி 12 நிமிடங்களுக்கு குறையாமலும் நடாத்தப்படும்.

5.2.5. மஞ்சள் அட்டை தண்டனை பெறும் வீரர் 2 நிமிடம் வெளியேற்றப்படுவார்.

5.2.6. பந்து Through ஆக அமைந்தால் மீண்டும் கையால் ஓங்கி எறிதல் தடை செய்யப் பட்டுள்ளது. மாறாக பந்தை நிலத்தில் உறுட்டிவிடல் வேண்டும்.

5.2.7. பந்துக் காப்பாளர் பிடித்த பந்தை மைதானத்தின் அரைவாசிப் பகுதிக்கு மேல் எறிதல் அல்லது அடித்தல் தடை செய்யப் பட்டுள்ளது.

5.2.8. பந்தானது உயரத்திற்கு அடிக்கப்பட்டு எங்காவது மேலே பட்டுக் கீழே விழுந்தால் அடித்த அணியைச் சேர்ந்தவர்களுக்கு எதிராக Freekick வழங்கப்படும்.

5.2.9. சாதாரண உதைப் பந்தாட்டத்தில் உள்ள மூலை உதை விதிமுறையே இங்கும் பின்பற்றப்படும்.

5.2.10. அனைத்து இறுதிப்போட்டிள்ளும் சம நிலையில் முடிவுற்றால் நேரடியாக தண்டனை உதை வழங்கப்படும். ஆனால் இறுதிப் போட்டி சம நிலையில் முடிந்தால் மேலதிகமாக 5 நிமிடங்கள் வழங்கப்பட்டு இதிலும் சம நிலை காணப்பட்டால் தண்டனை உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்படும்.

5.2.11. புதிய விதிமுரைகள்

- 5.2.11.1. உள்ளரங்க சுற்றுப்போட்டி
- 5.2.11.2. வெளியில் போன பந்தை அடிக்கும்போது, அல்லது பந்துகாப்பளர் ழரவஉழசநெச பந்தை அடிக்கும்போது, அல்லது குசநந முஉைம பந்தை அடிக்கும்போது பந்தை கையிலெடுத்து 4ளநஉக்குள் அடிக்க வேண்டும், இல்லாத பட்சத்தில் பந்து எதிர் அணிக்கு வழங்கப்படும்.
- 5.2.11.3. முன்புறமாகவோ, பக்கமாகவோ அல்லது பின்புறமாகவோ மூன்று தரம் வுயஉமடவைெ செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது. ஒரு கழகம் ஒரு விளையாட்டில் 4. தரம் இத்தடையை செய்தால், எதிர் அணிக்கு 10அ தூரத்தில் வைத்து தண்டனையுதை வழங்கப்படும். அதை தொடர்ந்து வரும் இப்படியான ஒவ்வொறு கழரடக்கும் தண்டனையுதை வழங்கப்படும். இத்தப் கழரட விளையாட்டு நேரமுடிவில் இடம் பெற்று நேரம் முடிந்தாலும் தண்டனையுதை வழங்கப்படும்.
- 5.2.11.4. 1/8 கொண்ட உள்ளரங்க சுற்றுப்போட்டிகளில் காலிறுதிக்கு தெரிவான கழகங்களுக்கு 3 புள்ளிகள் வழங்ப்படும்.